CC 53/2023
PW1 சந்திரசேகர்
15.11.2023
All Accused present.

**மனுவின் பேரில் சாட்சி சந்திரசேகர் அ.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு 4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

எதிரி ரத்தினராஜை எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான். கடந்த 24.09.2022ம் தேதி ரத்தினராஜை தவிர மற்ற மூன்று நபர்களை அதற்கு முன்பாக பார்த்தது கிடையாது என்றால் சரிதான். நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சம்பவ சமயத்தின் போது பார்த்ததாக சொல்லப்படும் நபர்களில் அங்க அடையாளங்களையோ மற்ற விபரங்களையோ குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. நானும், என் துணைவியாரும் அ.இ.அ.தி.மு.க கட்சியில் முக்கிய பொறுப்பு வகித்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய வீடானது பெருமாநல்லூரியிலிருந்து – திருப்பூர் சாலையில் மேற்புறமாக சுமார் 300 அடி சாலையில் வடக்கு பார்த்ததாக என் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு செல்லும் சாலையில் வடபுறமாக ஒரு பழ வண்டியும், தென்புறமாக ஒரு பலசரக்கு கடையும் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீட்டின் பின்புறத்தில் பாருடன் கூடிய ஒயின்ஷாப் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்து அரை மணி நேரத்திற்குள் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்ததாக கூறியுள்ளேன். அவ்வாறு இருக்கையில் ஆய்வாளருடன் எத்தனை காவல் துறையினர் வந்தார்கள் என்றால் சம்பவம் நடந்தவுடன் நாங்கள் காவல் நிலையத்தில் எதிரிகளை ஒப்படைத்தோம். ஆனால் காவல் துறையினர் வந்த போது ஆய்வாளருடன் நான்கு காவலர்கள் வந்திருந்தார்கள். காவல் துறையினர் வானத்தில் வந்தார்கள் என்றால் சரிதான். காவல் துறையினருக்கு பின்னால் இருக்கும் ஒயின்ஷாப்பிலிருந்தோ அல்லது என்னுடைய மகன் மேகதீஸ்வரன் காவல் துறையினருக்கு போன் மூலம் ஏதேனும் தகவல் கொடுத்தார்களா என்றால் இல்லை. ஒயின் ஷாப் நான் வாடகைக்கு விட்டுள்ளேன். மேலும் என் மகன் வேலைக்கு சென்றிருந்ததால் சம்பவ இடத்தில் அவர் இல்லை. தகவல் தெரிந்து வந்ததாக சொல்லப்படும் ஜெயராமன், சிவராமன், நாகராஜ் ஆகியோர் எனக்கு வேண்டியவர்கள் என்றால் சரிதான். என் வீட்டின் அருகே பழக்கடை, பலசரக்கு கடை மற்றும் ஒயின்ஷாப் கடை இருந்தும், சம்பவ சமயத்தில் சத்தம் கேட்டு யாரேனும் அங்கு வந்தார்களா என்றால் வந்தார்கள். நான்

ஒயின்ஷாப்பை வாடகைக்கு விட்டதாக சொல்லப்படும் நபரின் பெயர் என்னவென்றால் கோபால் ஆகும். பழக்கடை வைத்துள்ள நபரின் பெயர் என்னவென்றால் எனக்குத் தெரியாது. அந்த பழக்கடை இடமானது என் தம்பியுடையது. பலசரக்கு கடை வைத்திருந்த நபர் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரிதான். பெருமாநல்லூர் காவல் நிலையம் சம்பவ இடத்திலிருந்து அரை கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான்., காவல் துறையினர் வீட்டிற்கு வந்த பின்னர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அக்கம் பக்கத்திலிருந்த நபர்களையும் விசாரித்தார்களா என்றால் சரிதான். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எப்போது எங்கு வைத்து, எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் அன்றைய தினமே மாலை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள எழுத்துக்களின் மையும், நான் கையெழுத்திட்ட கையொப்பத்தின் மையும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. புகாரில் உள்ள எழுத்துக்களின் கையெழுத்து என்னுடையதல்ல என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்ததற்கு எனக்கு ஏதேனும் நகல் கொடுத்தார்களா என்றால் முதல் தகவல் அறிக்கை நகல் கொடுத்துள்ளார்கள். எனக்கு கொடுத்த முதல் தகவல் அறிக்கை நகலில் எதிரிகளை பெற்றுக் கொண்டதாக எந்தவொரு வார்த்தையும் இல்லை என்றால் சரிதான். எதிரி அன்பழகன் தன்வீட்டின் அருகே வந்த போது காரில் சீருடையில் வந்ததாக பின்னர் காவல் துறையினருடன் ஆலோசித்து தான் புகாரில் சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் நான் கொடுத்த புகாரில் தேதி இல்லை என்றால் சரிதான். நான்காவது எதிரியை ஏதேனும் அடையாள அணிவகுப்பு நடத்தி அதில் அடையாளம் சொன்னனா என்றால் இல்லை. சம்பவ சமயத்திற்கு பின்னர் தற்போது நீதிமன்றத்தில் தான் 4வது எதிரியை பார்க்கிறேன் என்றால் சரிதான். 4வது எதிரி என் வீட்டருகே வரவில்லை என்றும், 3வது எதிரி பணியாற்றக் கூடிய அறக்கட்டளை நிகழ்விற்காக 4வது எதிரி வந்தார் என்றும், அவர் நிகழ்வினை கேள்விப்பட்டு காவல் நிலையத்திற்கு சென்று கேட்ட போது, எனக்கும் காவல் துறையினருக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை வைத்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றும், நான் அ.இ.அ.தி.மு.க கட்சியில் முக்கிய பிரமுகராக இருந்து

வருவதால் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

K S SHABEENA
Digitally signed by K S SHABEENA
Date: 2023.11.15 16:26:49 +0200

நீதித்துறை நடுவர்,
அவிநாசி.

Name of the Interpreter : K.S. Shabeena, Judicial Magistrate, Avinashi
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 15th day of November 2023

K S SHABEENA
Digitally signed by K S SHABEENA
Date: 2023.11.15 16:26:56 +0200

Judicial Magistrate, Avinashi
Signature of Interpreter.